மின்னிதழ்

# தேசியம்

THESIYAM දේසියම් www.thesiyamnews.com

குரல் - 35 21.04.2023 (வெள்ளிக்கிழமை) சித்திரை மாதம் பக்கங்கள் 7 ஊக்குவிப்பு : ரூ.30.00



**பயங்கரவாத எதிப்புச் சட்டத்தை நிராகரிக்க கோரியும், வடகிழக்கு பிரதேசங்களில் பௌத்த, சிங்கள, இராணுவமயமாக்கலை நிறுத்தக்கோரியும், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (25.04.2023)**

## பொது முடக்கத்திற்கு தயாராகும்

# தமிழர் தாயகம்!



தமிழ் பேசும் மக்களின் தேசிய பத்திரிகை!

வார இதழ் தேசியம்
THESIYAM www.thesiyamnews.com

ஆசிரியர் பீடம்

இல.527, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com

எம் எல்லோரது இலட்சியமும் ஒன்று தான் எம் எல்லோரது தேவையும் ஒன்று தான். அது ஈழ த்தில் தமிழ் மக்களுக்கு உருப்படியான அரசியல் அதிகாரத்தைப் பெறுவது. எம்மிடையே கருத்து மாறுபாடு எழுவது எங்கு எனில் அந்த இலட்சியத் தையும் தேவையை யும் அடைவதற்காக நாம் கைக்கொள்ளும் வழி முறைகளிலும், அவற்றுள் எதற்கு முன்னுரிமை கொடுப்பது என்பதில் உள்ள வேறுபாடு களிலும் தான்.

சர்வதேசமே சிறந்த வழி என்கின்றனர் சிலர் இன்னும் சிலரே அதில் தவறுகள் உள்ளன என்றும் கூறுகின்றனர். ஐரோப்பிய யூனியனும் அது சார்ந்த நாடு வாரி அமைப்புக்களுமே சிறந்த வழி என்கின்றனர் வேறு சிலர் அவற்றில் உறுப்பு வகிக்கும் சிலரே அவற்றின் செயற்பாடுகளில் ஆழமான அதிருப்தியும் கொண்டுள்ளனர்.

போர்க்குற்ற விவகாரமே தமிழரிடம் இன்று உள்ள ஒரே ஆயுதம் என்கின்றனர் இன்னும் சிலர் அதனை முன்னெடுக்கும் சிலரே அது பயனளிக்காமலும் போகலாம் என்கின்றனர். இங்கே விவகாரம் என்னவென்றால் 2009 மே மாதத்திற்குப் பிறகு எந்த வழி உகந்தது, எந்த வழி உதவாது என்பது பற்றிய ஒரு கூட்டுத் தெளி வும், அவ்வாறான ஒரு கூட்டுத் தெளிவை அடை வதற்கு முயற்சி செய்ய வேண்டிய ஒற்றுமை மனப் பாங்கும் தமிழர் தரப்பிடம் இல்லை என்பதாகும். இதில் எனது நிலைப்பாடு என்னவெனில் இது எல்லாமே, இந்த மண்ணில், இந்த சூழ்நிலை யில் வாழும் மக்களைப் பொறுத்தது. அவர்களது நிலைப்பாடு, அவர்களது மனநிலை, அவர்களது வல்லமை, அவர்களது உடனடி மற்றும் நீண்ட காலத் தேவை என்பவற்றைப் பொறுத்தது.

எமக்கான உரிமைகளையும் அதிகாரங்களை யும் நாம் பெற்றே ஆக வேண்டும் என்பது ஒரு பக்கம் இருக்க இத்தனை ஆண்டுகளாக நாங் கள் இழந்த எல்லாவற்றுக்குமாகவேனும் அரசி யல் அர்த்தத் தில் எமக்கு உரித்துடைய ஏதோ ஒன்றை எடுத்தே ஆக வேண்டும் என்பதே எமது கருத்துமாகும்.

அதற்கு முன்னால் நெஞ்சுக்குள் சுமக்கும் நெரு ப்பின் புகையைக் கூட மறைத்து வைத்துவிட்டு, தட்டுத் தடுமாறியேனும் மெதுவாக எழுந்து நிற்க வேண்டும் என்பதே எம் மக்களின் உடனடித் தேவை என்பது எமது அவதானிப்பு ஆகும் அவ்வாறு தாம் எழுந்து நிற்பதற்கு புலம்பெயர் தமிழர்கள் கை கொடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

ஆசிரியர் ■ யாழ்ப்பாணம்

# யாழ். வலிகாமத்தில் ஆசிரியரால் மாணவிகளுக்கு தொந்தரவு:

## விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார்



யாழ். வலிகாமம் பகுதியில் உள்ள பெண்கள் பாடசாலை ஒன்றில் கற்பிக் கும் ஆசிரியர் ஒருவர் மாணவிகளிடம் பாலியல் ரீதியான சேட்டைகளில் ஈடுபடு கின்றார் என எழுந்துள்ள குற்றச்சாட்டு தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த பாடசாலையில் உயர்தர வகுப் பில் கற்கும் மாணவிகளுக்கு கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடும் ஆசிரியரொரு வர், மாணவிகளுடன் இரட்டை அர்த்த வசனங்கள் பேசுதல், பாலியல் ரீதியான சேட்டைகளில் ஈடுபடுதல் போன்ற செய ல்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என தக வல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் மாணவி ஒருவர் பெற் றோர்களிடம் முறையிட்ட போது பெற் றோர் பாடசாலை அதிபரை நேரில் சந்தி த்து ஆசிரியரின் செயற்பாடு தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி யுள்ளனர்.

இதன்போது பாடசாலை அதிபர், சாதக மாக நடந்து கொள்ளாது முறையிட்ட பெற்றோருடன் முரண்பட்டதையடுத்து பெற்றோர் மாணவியின் பாடசாலை விலகல் பத்திரத்தை வாங்கி கொண்டு மாணவியை வேறு பாடசாலையில் இணைத்துள்ளனர்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்ற தாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர் பில் , மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் அவ தானம் செலுத்தியுள்ளமையும் குறிப்பிட த்தக்கது.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# யாழில் முகமூடி வன்முறை கும்பல் வீட்டிற்கு சேதம் விளைவிப்பு!

யாழ்ப்பாணம் ஊரெழு பகுதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த வன்முறை கும்பல் ஒன்று வீட்டில் இரு ந்த உடமைகளை அடித்து உடைத்து சேதம் ஏற்படுத்தி விட்டு தப்பி சென்று ள்ளது.

குறித்த வீட்டினுள் நேற்றைய தினம் (வியாழக்கிழமை) இரவு வேளை மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த 06 இற்கும் மேற்பட்ட வன்முறை கும்பல் வீட்டின் யன்னல் கண்ணாடிகள், கதவு கள், வீட்டில் இருந்த உடைமைகள் என் பவற்றை அடித்து நொறுக்கி விட்டு தப்பி சென்றுள்ளனர். தாக்குதலாளிகள் தங் கள் முகங்களை மறைத்து முகமூடி களை அணிந்து இருந்ததாகவும், தாக்கு தலினால் 02 இலட்ச ரூபாய்க்கும் அதிக மான பொருட்களுக்கு சேதம் ஏற்பட் டுள்ளதாகவும் வீட்டார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ள நிலையில் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்














# யாழில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் 4ஆம் ஆண்டு நினைவேந்தல்!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் இன்றையதினம் வெள்ளிக்கிழமை (21) இடம்பெற்றது.

அதன்போது, குண்டு வெடித்த நேரமான 8.42 மணிக்கு தேவாலய மணி ஒலிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்காக இரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

நினைவேந்தலில் யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் கிறிஸ்தவ மதத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பு:

## சிலுவையை சுமந்து போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை கலைஞர்



'ATA ஐ சுருட்டிக் கொள் PTA ஐ இரத்துச் செய்" என்ற தொனிப்பொருளில் "மக்கள் போராட்டம் இயக்கம்" என்ற ஒரு இயக்கத்தினால் கொழும்பு - பிரதான தொடருந்து நிலையத்திற்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதிய பயங்கரவாத தடுப்புச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றைய தினம் (21.04.2023) இடம்பெற்ற இப்போராட்டத்தில் பல தரப்பினர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

மேலும் இந்த போராட்டத்தின்போது, இலங்கை திரைத்துறை கலைஞரான ஜெகான் அப்புஹாமி சிலுவையை சுமந்தவாறு, தரையில் விழுந்து கிடப்பதைப்பதை போன்று தனது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்.

போராட்டக்காரர்கள், நாசக்கார ஜனம்எப் குற்றங்களை எதிர்ப்பது பயங்கரவாதமா என்ற கோஷத்துடன், ராஜபக்ச அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பல்வேறு பதாகை





களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது பொலிஸ் பாதுகாப்பு பலபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் செய்திகள் ■ கொழும்பு



# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளை

## சட்டத்திற்கு முன் நிறுத்துங்கள் !

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பிலும் அதன் பின்னணி குறித்தும் அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் முதல்வர் தி.சர வணபவன் வேண்டுகோள் விடுத்துள் ளார்.

மட்டக்களப்பு நகரில் உயிர்த்த ஞாயிறு அன்று சீயோன் தேவாலயத்தில் இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குத லில் 31 பேர் உயிரிழந்துள்ளதுடன், 85 க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்து ள்ளனர்.



இந்து ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் வகையில் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள தூபி முன்பாக அஞ்சலி செலுத்தும் நிக ழ்வு இன்றைய தினம் (21.04.2023) நடைபெற்றுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக விசார ணையில் இன்று வரை எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை என்று தான் நான் பார்க்கின்றேன்.

அண்மையில் அசாத் மௌலானா என் பவர் ஜெனிபாவில் வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில் தனது கட்சி யைச் சார்ந்த சிலரை அவர் குற்றம் சாட்டி இருக்கின்றார்.

எனவே இந்த தகவல்கள் உண்மை யாக இருக்கும் பட்சத்தில் இதைச் சரியான முறையில் விசாரணை செய்து உரியக் குற்றவாளிகளுக்குத் தண் டனை வழங்க வேண்டும்.

ரணில் விக்ரமசிங்க தலைமையிலான இந்த அரசாங்கம் இவ்வாறான ஜன நாயக ரீதியிலான செயற்பாடுகளுக்கு அஞ்சலி செலுத்த அனுமதி வழங்கி இருக்கின்றார்கள்.

இந்த ஏப்ரல் குண்டு தாக்குதலுக்குக் காரணமானவர்களை இனம் கண்டு அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும்.

அதற்கு ஒரு துரும்புச்சீட்டாக அசாத் மௌலானா வழங்கியுள்ள வாய் முறைப்பாட்டின் அடிப்படையில் விசார ணையை நடத்தி அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின் றேன் எனத் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் செய்திகள் ■ மட்டக்களப்பு

# யாழ்ப்பாணத்திற்கு வந்த பிக்பாஸ் நடிகை ஜனனி ஐயர்..!



தென்னிந்திய பிரபல நடிகையும் பிக்பாஸ் பிரபலமுமான ஜனனி ஐயர் இன்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார்.

யாழ் திருநெல்வேலியில் அமைந்துள்ள வணிக நிலையமொன்றின் திறப்பு விழா நிகழ்விலேயே அவர் கலந்துகொண்டார்.

ஜனனி ஐயர் பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மக்களிடையே பரீட்சியமனார்.

இந்நிலையில் தற்போது சமூகவலைத்தளங் களில் ஆக்ட்டிவ் ஆக இருக்கும் இவர் அவ் வவ்ப்போது தனது புகைப்படங்களை பகிர் ந்து ரசிகர்களை குஷிப்படுத்தி வருகிறார்.

இவ்வாறாக தனது கியூட்டான கண்ணழகி னால் ரசிகர்களை கட்டிப்போட்ட ஜனனி ஐயர் இன்றையதினம் யாழ்ப்பாணத்திற்கு முதன் முறையாக வருகை தந்துள்ளார்.

அங்கு வந்த ரசிகர்கள் கூட்டம் மகிழ்ச்சியில் அவருடன் செல்ஃபி எடுத்துக்கொண்டனர்.





நிகழ்வுகள் ■ யாழ்ப்பாணம்

## புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற விபத்தில்
# குடும்பஸ்தர் உயிரிழப்பு




முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட குழந்தை இயேசு கோவில் - வற்றாப்பளை வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடம்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கைவேலி புதுக்குடியிருப்பினை சேர்ந்த 49 வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையான சந்தியா பரமேஸ்வரன் என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குழந்தையேசு கோவில் பத்திமாதா சந்தி பகுதியில் இன்று (21.04.2023) நண்பகல் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

கோப்பாபிலவு பகுதியில் இருந்து வந்த கன்டர் வாகனம் வீதியை கடக்க முற்பட்ட உந்துருளியில் பயணித்தவரை மோதித்தள்ளியுள்ளது. விபத்திற்குள்ளான உந்துருளி தீ பற்றி எரிந்துள்ளது.

காயமடைந்த குடும்பஸ்தர் புதக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

விபத்திற்குக் காரணமான கன்டர் வாகனத்தின் சாரதி புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

விபத்து தொடர்பிலான விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

உள்ளூர் செய்திகள் ■ புதுகுடியிருப்பு

# ஈஸ்டர் தாக்குதலில்
## பிள்ளையானுக்கும் தொடர்பு!
## சாணக்கியன் அதிரடி



ஈஸ்டர் தாக்குதலில் பிள்ளையானுக்கும் தொடர்பு இருப்பதாக அசாத் மௌலானாவின் வாக்கு மூலத்திற்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் இன்று (21.04.2023) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். அண்மையில் ஐ.நாவில் அசாத் மௌலானா என்ற நபர் ஈஸ்டர் குண்டு தாக்குதலின் பின்னணியில் பசில் ராஜபக்ச, மகிந்த ராஜபக்ச, கோட்டாபய ராஜபக்ச போன்றவர்களும் தற்போது இராஜாங்க அமைச்சராக உள்ள சிவனேசத்துரை சந்திரகாந்தனும் தொடர்பில் இருந்ததாக அவரது முன்னாள் பேச்சாளர் ஐ.நாவில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என இரா சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

உள்ளூர் செய்திகள் ■ மட்டக்களப்பு

# வவுனியாவில் நாசமான 1,700 இற்கு மேற்பட்ட பப்பாசி மரங்களும், பயன்தரு ஏனைய மரங்கள்!



வவுனியா வடக்கில் கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக சுமார் 1,700 இற்கு மேற்பட்ட பப்பாசி மரங்களும், பயன்தரு ஏனைய மரங்களும் அழிவடைந்துள்ளதாக செய்கையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடும் வெப்பதற்கு மத்தியில் வவுனியா வடக்கில் நேற்று(20) மாலை திடீரென கடும் காற்றுடன் மழை பெய்துள்ளது.

இதன்போது, வவுனியா வடக்கு ஒடைவெளி கிராமத்தில் வசிக்கும் விவசாயி ஒருவரின் தோட்டத்தில் காய்த்து அறுவடைக்கு சில வாரங்களே இருந்த 1,700க்கு மேற்பட்ட பப்பாசி மரங்கள் முறிந்து விழுந்துள்ளன.



அத்துடன், ஒலுமடு கிராம அலுவலர் பிரிவில் உள்ள விவசாயிகள் பலரின் வாழ்வாதாரமாக இருந்த பப்பாசி, வாழை, கத்தரி உள்ளிட்ட பயன்தரு மரங்களும் புகையிலை செடிகளும் அழிவடைந்துள்ளன.



இந்நிலையில் தமது வாழ்வாதரமாக மேற்கொண்ட பயிர்கள் அழிவடைந்தமை காரணமாக செய்கையாளர்கள் பெருதும் கவலை கொண்டுள்ளனர்.

உள்ளூர் செய்திகள் ■ வவுனியா




# யாழ். நல்லூரில்

## விடுதிக்குள் புகுந்து அடிதடி - மூவர் கைது..!

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள விடுதிக்குள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் மேற்கொண்டு விடுதி உரிமையாளர் மீது சாணி தண்ணி ஊற்றி தாக்குதல் நடத்தியமை தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கணவன் மனைவி உள்ளிட்ட மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, நல்லூர் பகுதியில் உள்ள விடுதிக்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை இரவு 03 பெண்கள் உள்ளிட்ட 07 பேர் கொண்ட கும்பல் கார் ஒன்றில் வந்து இறங்கி , விடுதி மீது தாக்குதல் மேற்கொண்டு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனங்கள் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

குறித்த தாக்குதல் சம்பவத்தால் பல இலட்ச ரூபாய் பெறுமதியான பொருட்கள் சேதமாக்கப்பட்டு உள்ளதாகவும் , கண்காணிப்பு கருவியின் கட்டுப்பாட்டு தொகுதியை உடைத்து தம்முடன் எடுத்து சென்றுள்ளதாகவும் விடுதி உரிமையாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண காவல்துறையினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த விடுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் கட்சியொன்றின் அலுவலகமொன்று இயங்குவதுடன் உரிமையாளர் அரசியல் கட்சியின் அமைப்பாளராகவும் செயற்படுகிறார்.

ஆனபோதும் அரசியல் கட்சி அலுவலகத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்பதுடன் குறித்த தாக்குதலுக்கு தனிப்பட்ட குடும்ப விவகாரமே காரணம் என்று தெரியவருகிறது. இந்நிலையில் விடுதி உரிமையாளர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் காவல்துறையினரால் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# யாழ் பல்கலையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல்!



யாழ் பல்கலைக்கழகத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் நான்காம் ஆண்டு நினைவேந்தல் கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சில்வெஸ்டார் ஜெல்சின் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உயிர்நீத்த உறவுகளின் நினைவுருவபடத்திற்கு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தி ஈகைசுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில், யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், யாழ் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

உள்ளூர் செய்திகள் ■ யாழ்ப்பாணம்

# ஜனநாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் அன்னை பூபதியின் நினைவேந்தல்

## வாகரையில் முன்னெடுப்பு...





தியாக தீபம் அன்னை பூபதியின் 35வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஜன நாயகப் போராளிகள் கட்சியின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் வாகரை கதிரவெளி புச்சாக்கேணியில் இடம்பெற்றது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வாக ரைப் பிரதேச இணைப்பாளர் சதீஸ் அவர் களின் ஏற்பாட்டில் உறுப்பினர் சங்கர் அவர் களின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கட்சியின் உபதலைவர் என். நகுலேஸ், நகரப் பொறுப்பாளர் தேவ குமார், மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் அணிப் பொறுப்பாளர் பாலச்சந்திரன் மற் றும் கட்சியின் வேட்பாளர்கள், வட்டாரங் களுக்கான பொறுப்பாளர்கள், உறுப் பினர்கள், பொதுமக்கள், வாகரைப் பிரதேச மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அன்னை பூபதியின் நினை வாக கட்சியின் உபதலைவர் அவர் களினால் பொதுச் சுடரேற்றப்பட்டு, கட்சி உறுப்பினர்கள், பொது மக்களினால் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வின் விசேட அம்சமாக அன்னை பூபதியின் நினைவாக வாகரை பிரதேசத் தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக் கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் செய்திகள் ■ மட்டக்களப்பு

## ஈஸ்டர் குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கு : மட்டுவில் கவனயீர்ப்பு போராட்டம்..!







இன்று 21.04.2023 காலை 9.30 மணிக்கு 2019.04.21 ஈஸ்ர் தினத்தன்று கிறிஸ்தவ ஆலயங்கள் மீது நடாத்தப்பட்ட வெடிகுண்டு தாக்குதலில் கொள்ளப்ப மக்களுக்கான அஞ்சலி நிகழ்வானது மட்டக்களப்பு ஆயர் இல்ல சார்லஸ் மண்டபத்தில் உணர்வு பூர்வமாக அனுஸ்டிக்கப் பட்டு பின்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிகேட்டு கவணயீர்ப்பு போராட்டமும் நடாத்தப்பட்டது.


இந் நிகழ்வை மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டது.

உள்ளூர் செய்திகள் ■ மட்டக்களப்பு

## வேலணையில் விசமிகளால் தீயூட்டப்பட்ட மரங்கள்: முன்மாதிரியாக செயற்பட்ட கிராம மக்கள்..!

யாழ். வேலணைப் பிரிவிற்கு உட்பட்ட J10 அல்லைப்பிட்டிச் சந்தியில் இருந்து வேலணை நோக்கி செல்கின்ற பிரதான வீதியின் கடற்கரை ஓரமாக நாட்டப்பட்ட மரங்கள் விசமிகளின் தீயூட்டும் செயற்பாட்டினால் எரிந்து நாசமாகின்றன.

இச் செயற்பாட்டினை தடுக்கும் முகமாகவும் எமது வளத்தினை பாதுகாக்கும் பொருட்டும் இன்று (21.04.2023) வெள்ளிக் கிழமை காலை 7.00 மணிக்கு மரங்களை சுற்றி தீப் பிடிக் காத வகையில் துப்பரவுபடுத்தும் சிரமதான நிகழ்வானது கிராம மட்ட உத்தியோகத்தர்கள், சமுர்த்தி முத்திரைப் பயனாளிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது.



உள்ளூர் செய்திகள் ■ வேலணை